RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s626

OPEN ACCESS

# ஒரு காவிரியைப்போல நாவலின் தலைமைப் பாத்திர ஆளுமைப்பண்பு

அ.கோ. ஸ்ரீதேவி [அ, *], சு. இளமாறன் [அ]

[அ] தமிழ்த்துறை, இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்- 629252, தமிழ்நாடு, இந்தியா.

# Personality Trait osf Lead Character in the Novel 'Oru Kaviriyai Pola' (Like a Cauvery)

A.K. Sreedevi [a, *], S. Elamaran [a]

[a] Department of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyoor-629252, Tamil Nadu, India

* Corresponding Author: aksdevi82@gmail.com

Received: 24-10-2021
Revised: 13-04-2022
Accepted: 01-05-2022
Published: 18-07-2022

Check for updates

**ABSTRACT**

The leading characters include the hero and heroine of the story. A lead protagonist is a character that drives the story a lot. Story development, story nucleus, other story events—all of these can be centred around the main character. This character plays an important role in the novel. The protagonist, or chief character, does great things in the novel. The entire novel can be found in the information about them. These protagonists will be the central characters of the novel. The main protagonists are the characters who drive the plot of the novel. When we think of the world-renowned novels, the characterization of those novels comes to our mind. When we think of the world-renowned novels, the characterizations of those novels, like obligation, acceptance of blame, and sorrow, come to our mind. An example of this is Thagazhi's Karutthamma and Kalki's Sivakami. Like River Kaveri, in the novel, Kaveri's qualities like patience, respect for others, change of heart, artistry, will, joy, compassion, fear are also found in this article. The heroine of the novel "Oru Kaviriyai pola" was a woman who fought against various problems in her life and became successful. The novel "Oru Kaviriyai pola" is a social novel. In this way, she does not have to live with a society that does not agree with her vision. Kaveri comes to India alone from the South African country to change her life where she used to live, just like the characters who step aside, saying 'let society run its course, I live alone in my course'.

**Keywords:** Artistry, personality, patience, hobby, duty

## முன்னுரை

ஒரு கதை முழு வடிவம் பெற வேண்டுமாயின் அதற்குப் பாத்திரங்கள் இன்றியமையாததாகும். கதைக் கருவிற்கு விளக்கமளிக்கும் ஆசிரியர்கள் அதைப் பாத்திரங்கள் வாயிலாகவே விளக்க முடியும். நாவலில் பாத்திரங்களுக்கு தனி இடமுண்டு. கதைக் கருவிற்கு விளக்கமளிக்கும் ஆசிரியர்கள் அதைப்பாத்திரங்கள் வாயிலாகவே விளக்க முடியும். ஆசிரியரின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதே பாத்திரம் ஆகும். மொத்தத்தில் பாத்திரங்கள் இல்லாவிட்டால் கதையே இல்லை என்று கூறலாம். கதையில் காணப்படும் இன்ப துன்ப நிகழ்ச்சிகள் நம்மைப் பாதிப்பதற்குக் காரணம் பாத்திரங்கள் ஆகும். சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு மனிதர்களை நாவல்களில் பாத்திரங்களாகக் காணும் போது வாசகர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். நாவலில் பாத்திரங்களைப் படைக்கும் போது, அவை முழுக்க கற்பனையாகப் படைப்பது என்பது எந்த நாவலாசிரியராலும் இயலாத காரியம் ஆகும். அவ்வாறு கற்பனையாக படைப்பதுவும் இல்லை. ஆனால் ஆசிரியன் சொந்தக் கற்பனையில் உருவானது போன்று

மாற்றியமைக்க இயலும். முன் மாதிரியான நபர் ஒருவரை எடுத்துக் கொண்டு ஒரு பாத்திரத்தைப் படைக்கும் போது அப்பாத்திரம் கற்பனையானதே என எண்ணும் அளவிற்கு சிறப்பாகப் படைப்பது நாலாசிரியரின் திறமையாகும். ஒரு காவிரியைப் போல நாவலின் தலைமைப்பாத்திரத்தின் பெயர் காவேரியாகும். ஆளுமை என்பது ஒருவனது புறத்தோற்றத்தை வைத்துக்கூறாமல் அவனது பண்பு, திறம் செயல்பாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். இக்கட்டுரை காவேரியின் ஆளுமைப் பண்பு பற்றிக் குறிப்பிடுவதாகும்.

## ஆளுமை-விளக்கம்

"ஒருமனிதன் தன் பாரம்பரியத்தினாலும், சூழ்நிலையாலும் பெற்றுள்ள உள்ளார்ந்த மனப் போக்குகள், உள்ளத் துடிப்புகள், செயல்முறைகள், உடல் வேட்கைகள் மற்றும் இயல் பூக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பே அவனது ஆளுமையாகும்". தன் வாழ்க்கையில் எதிர்படும் பிரச்சனைகளைத் தனக்கே உரித்தான முறையில் ஒவ்வொரு மனிதனும் தீர்ப்பதில் இதை அறிய முடிகிறது. இத்தகைய செயல்படு முறைகள்அவனது ஆளுமையின் தன்மையை வெளிப்படுத்துகின்றது (Nagarajan, 2001).

## பொறுமை

"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை மறத்தல் அதனினும் நன்று" என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப பல்வேறு துன்பங்களுக்கு இடையே காவேரி பொறுமையுடன் இருக்கிறாள் (Parimelalhagar, 2009). தனது தாய்க்கு நிகரான சவுந்தரியா அண்ணியிடம் இளையஅண்ணி கோபமாகப் பேசியதைக் கேட்டும் அமைதியை கைவிடவில்லை. வீட்டுச்செலவிற்கு அண்ணி யசோதா மாதம் தோறும் பணம் கேட்டபோதும், லீனாவைவீட்டிலிருந்து வெளியேற்றிய போது போன்ற நிகழ்ச்சிகளில் எதுவும் பேசவில்லை. விடுமுறை நாட்களில் தனியாக நின்று அனைத்து வேலைகளையும் செய்கிறாள். காவேரியைப் புழுவாக நினைத்து உதாசீனப் படுத்திய யசோதா 'எவனையாவது கட்டிக்கொண்டு வீட்டைவிட்டுக் கிளம்பமாட்டாளா இந்த மகராசி நமக்கு பெரும் விலங்காக, கழுத்திலே ஏற்றிவிட்ட கால் போலஎன பலதடவைக் காவேரியின் காதுபடக் கூறிய போதும் அதனைப் பொருட்படுத்தாமல் இருப்பதுஅவளது பொறுமையை வெளிப்படுத்துகிறது (Lakshmi, 1983). 'மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கனியும் முன் கசக்கும் பின் இனிக்கும்.' என்னும் பழமொழிக்கு ஏற்ப தன்னைவிடப் பெரியவர்களின் பேச்சிற்குக்கட்டுப்பட்டவளாக காவேரிஇருக்கிறாள். தனதுமூத்த அண்ணி சவுந்தரியின் பேச்சிற்கு உடன்படுகிறாள். சித்தப்பா வீட்டினரிடம்தனி மரியாதை கொள்கிறாள். வீட்டில் பணிபுரிகிற லீனாவிடம் பற்றுதலைவெளிப்படுத்துகிறாள். அவளது பேச்சிற்கு அடிபணிகிறாள்.

## துணிச்சல்

நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்

ஞான நல்லறம் வீர சுதந்திரம்

பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"

என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப காவேரி தனக்குள்ளே துணிச்சலை உருவாக்கிக்கொள்கிறாள் (Meiyappan, 1992). தாய்நாட்டுப் பயணம் அவளுக்கு புதிதானது என்ற போதிலும் தனியாகவே செல்கிறாள். தனக்கு ஏற்படும் சிலபிரச்சனைகளைச் சகித்துக் கொள்வதுடன் சிலவற்றை எதிர்த்துக் கேட்கும் அளவிற்கு துணிச்சல் மிக்கவளாக இருக்கிறாள். சென்னையில் டீக்கடை ஒன்றில் கண்களில் வெறியுடன் தன்னைப் பார்த்த தொங்கு மீசைக்காரனை "மிஸ்டர்......என்ன வேணும்? யார் நீங்க்" என ஆங்கிலத்தில் கேட்டு அவனை விரட்டினாள்." (Lakshmi, 1983)

## கடமை

“மடியை மடியா ஒழுகல் குடியைக்

குடியாகவேண்டுபவர்

என்ற குறளுக்கேற்பக் காவேரி சோம்பலை நீக்கி இடையறாது செயலாற்று பவளாய்விளங்குகிறாள் (Parimelalhagar, 2009). காவேரி பள்ளிக்கூட கவனிப்பு அமைப்பில் பணிபுரிகிறாள். எடுத்துக்கொள்ளும் செயலை நேர்த்தியாகக் குறித்த நேரத்தில் முடிக்கிறாள். லேடிஸ்மித்திற்கு செல்லும் போது ஒரு வாரத்திற்கு தேவையான பொருட்கள், தங்கும் இடத்தை தயாராக்கியது, பள்ளிக்கு சரியான நேரத்தில் செல்வது, தனக்கு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பிள்ளைகளின் ஆரோக்கியத்தை அறிவது போன்றவற்றில் கருத்தாக இருக்கிறாள்.

## பழிச்சொல் ஏற்றல்

“அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை

இகழ்வாரைப் பொறுத்தல் தலை.”

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப காவேரி ஊராரின் பழிச் சொற்களைத் தாங்குகிறாள் (Parimelalhagar, 2009). மோகனுடனான திருமணம் நின்ற போது “காவேரி நர்ஸ் வேலை பார்க்கிறாள் அல்லவா? டாக்டர் எவனையாவது சிநேகிதம் பிடித்திருப்பாள்” என்ற வம்புக்கிளம்புகிறது (Lakshmi, 1983). அலமேலு அம்மாள்காவேரியைப் பார்த்து “நர்ஸுக்குப் படிச்சவன்னா என்ன? அத்தனை ஆம்பிள்ளைகளோடையும் இப்படிச்சிரிச்சுகிட்டுப் பேசணுமா? என்று பழித்தாள். தவமணிமருத்துவமனையில் வரவேற்பாளராக இருந்தபோது மருத்துவர் ரவிகாந்தனின் அக்கா லாவண்யாகாவேரியை “இந்தரிஸப்ஷனிஸ்ட் வேலையை விட்டிட்டு நீ பேசாம சினிமாவில் சேர்ந்திடலாம் என்று ரவிகாந்தன் மீது காதல் கொண்டதாக வீண் பழி சுமத்துவதை அமைதியாக ஏற்றுக் கொள்கிறாள் (Lakshmi, 1983).

## துயரம்

இன்பமும் துன்பமும் வாழ்வில் இயல்பாய் அமைவதாகும். துன்பம் என்ற ஒன்றால் மட்டுமே இன்பத்தைப் பிரித்தறிய முடியும். துன்பத்தையும் உறுதியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவர்

“இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அஃ: தொப்பதில் என்று குறிப்பிடுகிறார் (Parimelalhagar, 2009).

காவேரி தனது வாழ்வில் இன்பத்தைவிட துன்பத்தையே அதிகம் சந்திக்கிறாள். சிறு பருவத்திலே பெற்றோரை இழந்த காவேரி தன்னைக் குழந்தையாக வளர்த்த அண்ணன், அண்ணியைத் திருமணத்திற்கு முன்பு இழக்கிறாள். திருமணம் தடைபட்டுப் போன கவலையில் இருந்து மீண்டுவர சிறிதுகாலம் ஆனது. யசோதா அவளைப் பாரமாகக் கருதியதோடு வீட்டைவிட்டுவெளியேறவும் காரணமாகிறாள். தாய் நாட்டிற்குச் சென்று வாழ்வை வளமாக்க எண்ணுகிற காவேரி இங்கும் பல துயரங்களைச் சந்திக்கிறாள்.

## கலைத்திறன்

அம்கேனிவைத்திய நாதர் ஆலயத்தில் பஜனைகளில் கலந்துகொள்வதுடன் பலமுறை தனியாகவும் பாடி இருக்கிறாள் என்பதன் மூலம் அவளது இசை ஆர்வம் வெளிப் படுகிறது. வீட்டில் டேபிள் செட் செய்வதிலும் அவள் திறமையனவளாகவே வீட்டில் பல்வேறுவகையான செடிகள் நடுவதில் ஆர்வம் அதிகம் காட்டுறாள். விடுமுறை நாட்களில் சமயல் வேலை, பொருட்களை

ஒழுங்காக அடுக்கி வைப்பது என்று அதிக ஈடுபாடு கொள்கிறாள். லேடீஸ்மித்திலுள்ள ஜோதிசித்தப்பாவின் வீட்டாருக்கு நன்றி தெரிவிக்க அவள் வாங்கிய மலர் கொத்து, மேஜைவிரிப்பு போன்ற பொருள்கள் அவளது கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன. வீட்டில் டேபிள் செட் செய்வதிலும் அவள் திறமையானவளாகவே விளங்குகிறாள்.

## பொழுதுபோக்கு

வாரத்தின் இறுதி நாட்களைப் பள்ளிச் சிறுமி போலக் காவேரி எதிர்பார்க்கிறாள். வெள்ளிக்கிழமை மாலை வீட்டிற்கு வந்ததும் சூடான வெந்நீரில் குளித்து விட்டு இரவு உணவினை முடித்தபின் ரேடியோவில் நாடகம் அல்லது இசை என்றுக் கேட்டு மகிழ்வாள். தாய்க்கு ஒப்பான சவுந்தரியாவுடன் வேடிக்கையாகப் பேசிச்சிரித்தும் பொழுதைக் கழிக்கிறாள். தொலைக்காட்சிப் பெட்டியில் பிடித்தமான நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கிறாள். படுக்கையில் சாய்ந்தவாறு நூலகத்தில் இருந்து எடுத்துவந்த கதைப் புத்தகங்களைப் படிக்கிற நிலையில் தூங்குகிறாள்.

## முடிவுரை

நாவலில் வரும் பாத்திரங்கள் முழுமையும் கற்பனையன்று என பாத்திரத்தின் முன் மாதிரி விளக்குகிறது. பாத்திரப் படைப்பே என்றும் வாசகர் மனதில் நிலையாக இடம் பெறுகிறது. பாத்திரங்களை தலைமைப் பாத்திரம், துணைப்பாத்திரம், உதிரிப்பாத்திரம் போன்ற வகைகளாக மட்டுமன்றி வேறு பலவகைகளாகவும் வகைப்படுத்துகின்றனர். நாவலில் குறிப்பிடத்தக்க செயலைச் செய்வதும்தலைமைப் பாத்திரமாகும் தான் வாழும் சமூகத்திலிருந்து முரண்பட்டு வாழ்பவனே ஒரு நாவலின் தலைமைப் பாத்திரமாகமுடியும் என்று கருதப்படுகிறாது. பாத்திர படைப்பாக்க உத்தியில் ஒன்றாக பாத்திர அறிமுகம் உள்ளது. பாத்திர வளர்ச்சியானது வாழ்வை ஒட்டியதாய், இயல்பானதாய் அமைவதாகும். பாத்திரங்கள் வாசகர் மனதில் நிலைபெற பாத்திர முடிவு ஒரு காரணமாக அமைகிறது. ஒரு காவிரியைப் போல நாவலின் தலைமைப் பாத்திரமான காவேரியின் ஆளுமைப் பண்பின் விளக்கமும் காவேரியின் பொறுமையும், பெரியோரை மதித்து நடக்கும் பண்பும், கடமையுணர்வும், அவளது துயரமும், காவேரியின் விருப்பம், பொழுது போக்கு, கலைத்திறன், மகிழ்ச்சி போன்றவற்றை இக்கட்டுரை விளக்குகிறது.

## References

Lakshmi (1983), Oru Kaveriyai Pola, Poongodi Pathippagam, Chennai, India.

Meiyappan, S., (1992) Bharathiyar Kavidhaigal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Nagarajan, K., (2001) Kalvi Ulaviyal, Ram Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Rasu, T., (1989) novelkalil pathirapaduppu, Manivaasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License